OS:685/2018

Date: 23.02.2024

பெயர் :கணேசன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**- 5, 6 பிரதிவாதிகள் தரப்பில்

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்தது யார் என்றால் வாதி அழைத்து வந்தார். தாவா சொத்து விவரத்தில் தாவா சொத்துக்கள் எத்தனை அயிட்டங்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஒரே அயிட்டமாகத்தான் காட்டப்பட்டுள்ளது. சர்வே எண் என்ன என்றால் 51/2 ஆகும். விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 5 ஏக்கர் 10 செண்ட் ஆகும். மேற்படி நிலத்தில் வீடு அமைந்துள்ளதா என்றால் மெத்தை வீடும், தொகுப்பு வீடும் உள்ளது. தொகுப்பு வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் 2010-2011 ம் ஆண்டு கட்டப்பட்டது. தார்சு வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டுள்ளது என்றால் அதுவும் கட்டி 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். தாவா சொத்தில் 5HB மோட்டார் பம்பு செட் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்து விவரத்தில் 5HB மோட்டார் பம்பு செட், தார்சு வீடு மற்றும் தொகுப்பு வீடு பற்றி வாதி குறிப்பிட்டாரா என்றால் காட்டவில்லை. வழக்கு தாக்கல் செய்யும்போது எனது மனைவியின் சகோதரி வசந்தி என்பவரை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர் எங்கு இருக்கிறார் என்றே எங்களுக்கு தெரியவில்லை. நான் வாதியின் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா தாக்கல் செய்யும்போது 5HB மோட்டார் பம்பு செட், தார்சு வீடு, தொகுப்பு வீடு பற்றிய விவரங்களையும், அதன் மதிப்புகளையும் குறிப்பிடாததாலும், எனது மனைவியின் சகோதரி வசந்தியை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்பதால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.